26th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: பலாத்காரத்தை மிகப் பெரிய அளவிலே செய்யவேண்டுமென்று செய்தியை வெளியிட்ட பெரியார் ராமசாமியின் 'விடுதலை' பத்திரிகை மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Arrears of Sales Tax and Entertainment Tax

* 334 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the arrears of sales tax, entertainment tax, due as on 30th September 1964?

THE HON. SRI R. VENKATARAMAN : The particulars regarding the arrears of tax under the Madras General Sales Tax Act, 1959, Central Sales Tax Act, 1956, Madras Sales of Motor Spirit Taxation Act, 1939, Madras Entertainments Tax Act, 1939 and Madras Local Authorities Finance Act, 1961 are furnished in the statement [a] placed on the Tabe of the House.

SRI C. CHIRANJEEVULU NAIDU : There are arrears of Entertainment Tax. Generally the tax is collected in advance by stamping the tickets. Then what is the cause for the arrears?

THE HON. SRI R. VENKATARAMAN : That is why the arrears are very low; it is only 6 lakhs and odd rupees.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமாஷா வரி பாக்கியை சர்க்கார் தள்ளிக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தினுல், அதைக் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள் என்பது உண்மையா ? அப்படியானுல் அதைப்பற்றி இந்த அமைச்சரவை என்ன சொல்லி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தமாதிரி நினைப்பதற்கு இடம் இல்லை. 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அரியர்ஸ் இருக்கிறது. அது பத்து, பதினைந்து வருஷங்களாக உள்ள அரியர்ஸ் என்று சொல்லலாம். இதைச் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஆகையால் இந்த மாதிரி எண்ணத்திற்கு இடம் இருப்பதாகப் புள்ளி விவரம் காட்டவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : விற்பனை வரியிலே ஏறக்குறைய 3½ கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. அதை ஒழுங்காகச் செலுத்துவதற்கு டாக்சிலே ரிபேட் கொடுத்தால் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒழுங்காகக் கொடுத்தால் விற்பனை வரி மட்டும்தான் வாங்குகிறோம். கால தாமதம் செய்தால் பெனல்டியுடன் வாங்குகிறோம். ஆகையால் ஒழுங்காகக் கொடுத்தால் பெனல்டி கிடையாது விற்பனை வரி மாத்திரம் செலுத்தவேண்டும். இதுவே ஒரு சலுகை என்று நினைக்கிறேன்.

---

a Printed as Appendix on page 221.

[26th March 1965

திரு. எஸ். முருகையன் : வியாபாரிகள் ஏற்கெனவே மக்களிட மிருந்து வரியை வாங்கிவிடுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அந்த வரியை சர்க்காருக்குக் கொடுக்காமல் ஏன் ஏமாற்ற வேண்டும் என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் எனக்கும் புரிய வில்லை. மக்களிடமிருந்து வாங்கிய வரியை ஏன் இந்த வியாபாரி கள் கட்டுவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள் என்று புரியவில்லை. அந்த அரியர்ஸ் எல்லாம் பாதிக்குமேல், நான் விவாதத்தின்போது சொன்னேன், கோர்ட்டுகளிலே அப்பீலுக்குச்சென்று பல உத்திர வுகள், தடை உத்திரவுகள், ஒரு கேசை ஒட்டி பல கேஸ்கள் தீர்ப்பு செய்ய வேண்டிய அவசியம், ஆகியவற்றிற்காக நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறது. அவ்வாறு நிறுத்திவைக்கப்பட்டு கட்டப்பட வேண்டிய தொகை 78 அல்லது 79 லட்சம் ரூபாய் இருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : விற்பனை வரி பாக்கி உள்ளவர் களினுடைய பெயர்களைச்சொல்ல முடியுமா ? அப்படி இல்லாவிட் டாலும் இந்தச் சபை முன் இதைப்பற்றி ஒரு அறிக்கை வைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதனால் இந்தச் சபைக்குப் பயன் இருக்காது. செலவுதான் அதிகம் ஏற்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இந்த விற்பனை வரி பாக்கி ஏறத்தாழ 3½ கோடி ரூபாய் வசூலாக வேண்டி இருக்கிறது. அதை வசூலிப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட் டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : 3½ கோடி என்று சொல்வது சரியல்ல. கரண்ட் அரியர்ஸ் என்று கணக்கு இருந்தாலும் பல வருஷங்களாக அதாவது பத்து வருஷங்களுக்கு மேலாக இருக்கக் கூடிய பாக்கிகள் எல்லாம் சேர்ந்ததுதான் இருக்கின்றன. இப்போது இருக்கும் பாக்கிகள் கோர்ட் நடவடிக்கைகளிலே இருக் கின்றன. சில வசூல் செய்யப்படமுடியாத நிலையில் வர்த்தகத்தில் நஷ்டம் ஏற்பட்டு எல்லாவற்றையும் இழந்துவிட்டிருக்கிறார்கள். சர்க்கார் அதை ரைட் ஆப் செய்ய முடியாததற்குக் காரணம் என்ன வென்றால் அவர்கள் வேறு ஏதாவது தொழில் செய்து, அந்தத் தொழில் நடக்கிறபோது அதன் மூலம் வசூலிக்க முடியுமா என்று பார்ப்பதற்காகத்தான் ரைட் ஆப் செய்யவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : வசூலிக்க முடியாமல் இருக்கின்ற வரி பாக்கி எவ்வளவு என்று கூறமுடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுவரை ரைட் ஆப் பண்ணியது 14 லட்சம் ரூபாய். ரிக்கவரி செய்யமுடியாமல் இருப்பது 9 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய். அதை ரைட் ஆப் செய்யவில்லை, வசூல் செய்யமுடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன்: 5½ லட்சத்திற்கு மேல் டர்ன் ஓவர் இருக்கின்ற வியாபாரிகளிடமிருந்து எவ்வளவு பாக்கி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

26th March 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகக் கேள்வி போட்டால் பார்த்து சொல்லலாம்.

திரு. சா. கணேசன்: இந்த பாக்கி வரிகளை ரைட் ஆப் செய்வதற்கு அவர்கள் ஸ்தலத்திலிருந்து ஓடிப்போனது காரணமா? அல்லது சட்ட ரீதியாக கட்ட வேண்டாம் என்ற தீர்ப்பின் மீது ரைட் ஆப் செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சட்ட ரீதியாகக் கொடுக்க வேண்டியதில்லை என்று சொன்னால் அதை நாம் அரியர்ஸ் ஆகக் காட்டுவதில்லை. ரைட் ஆப் என்பதெல்லாம் வசூல் செய்வதற்கு என்று எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளையும் அதாவது ரெவின்யூ ஆக்ட், மெஜிஸ்டீரியல் ஆக்ஷன் எல்லாம் செய்தும்கூட வசூலிக்க முடியாமல் போனால்தான் ரைட் ஆப் செய்யமுடியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த பாக்கி உள்ளவர் பட்டியலை சபை முன் வைக்கவேண்டாம், வைப்பதால் செலவுதான் ஆகும், வேறு ஒன்றும் பலன் இருக்காது என்று அமைச்சர் பதிலிலிருந்து தெரிகிறது. அப்படிப் பட்டியல் வெளியிட்டால் எல்லோரும் பாக்கி வரியைக் கட்டுவார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். அமைச்சர் என்ன கருதுகிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது தேவை இல்லை என்று நினைக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நில வரி பாக்கி இருந்தால் உடனடியாக ஜப்தி செய்து வசூலிப்பதற்கு சட்டத்தில் அதிகாரம் இருப்பதுபோல் வியாபாரிகள் வரியைக் கொடுக்காமல் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்காததால் பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பாக்கியை உடனுக்குடன் வசூல் செய்ய என்ன முறையைக் கையாளவேண்டும் என்பதை அரசாங்கம் ஆராய்ந்து இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு நன்றி. பொதுவாகச் சொல்லப்படுகிற புகார்கள் ரொம்ப நெருக்கி, தொந்தரவு செய்து, கொஞ்சம் கூட அவகாசம் கொடுக்காமல் பணம் வசூல் செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். இன்னும் கொஞ்சம் அதிகமாக நெருக்கி வசூல் செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு நன்றி. சட்டப்படி அவர்கள் மீது பல நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். (1) ரெவின்யூ ரிகவரி ஆக்ட் கீழே 'ஆக்ஷன்' எடுக்கமுடியும். (2) மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேஸ் போட்டு 'பைன்' செய்ய முடியும். இப்போது வசூலிக்க முடியாமல் இருக்கக் கூடிய 9 லட்சம் ரூபாய் ரெவின்யூ ரெகவரி ஆக்ட் கீழே கேஸ் போட்டு, மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேஸ் போட்டு, எல்லாம் செய்த பிறகும் வசூல் செய்வதற்கு வழி இல்லாமல் போய் விட்ட தொகை தான்.

[26th March 1965

திரு. து. ப. அழகமுத்து: வரி ஏமாற்றுவதற்கென்ற நோக்கத்தோடு வேறு பெயரில் வர்த்தக ஸ்தாபனங்களை வைத்தவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்ட வியாபாரிகள் எத்தனை பேர்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அம்மாதிரி ஏமாற்றுவதற்கு சட்டத்தில் இடம் இல்லை. ஏற்கெனவே யார் வியாபாரி என்றாலும் அவர் மீது 'பர்சனல்' ஆக வழக்கு தொடரப்படுகிறது, கட்ட வேண்டிய வரி பாக்கிக்கு.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: வியாபாரிகள் வரி பாக்கி மாத்திரம் அல்ல, வியாபாரிகளுக்கே பாக்கி வைக்கிற காரணத்தால், வேறு பெயரில் லைசன்சை மாற்றி வியாபாரம் செய்வது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படி இருந்தால் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுக்க இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்கள் வேறு எந்த வியாபாரம் செய்தாலும், வரிக்காக அவர் சொத்தை நாம் எடுத்துக் கொள்ளலாம். அவருக்கு சொத்து இல்லை என்று சொன்னால்தான் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறதே தவிர, மற்ற வகையில் பணம் இருக்குமானால், சொத்துக்கள் இருக்குமானால் சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்க வழி இருக்கிறது.

Collection by way of penalty under Madras General Sales Tax Act, 1959

* 335 *Q.*—Sri M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the amount collected by way of levy of penalty for belated payment of Sales-tax under section 24 (3) of the Madras General Sales Tax Act, 1959, during the year 1963–64?

The Hon. Sri R. VENKATARAMAN: A sum of Rs. 1,10,660.50 has been collected by way of penalty under section 24 (3) of the Madras General Sales Tax Act, 1959, during the year 1963–64.

மாவட்டங்களில் நடைபெற்ற தொழில் கருத்தரங்குகள்

* 336 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்டந்தோறும் நடத்தப்பட்டுவரும் தொழில் கருத்தரங்குகளின் நோக்கமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: குறிப்பாக, அந்தந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய வளங்களையும், திறன்களையும் ஒட்டி, பற்பல தொழில் துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை உத்தேச தொழில் முதலாளிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பது தான் இக்கருத்தரங்குகளின் நோக்கமாகும்.